தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 149 /ந/2023
நாள் 21.07.2023

திருமதி.G. மாரிமுத்து,
நாகப்பட்டினம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
நாகப்பட்டினம் நகராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

நாகப்பட்டினம் மாவட்டம், பரவைக்கார தெரு, எண்.6 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.G.மாரிமுத்து என்பவரின் 22.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.05.2023 அன்று பெறப்பட்டு 149/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாகப்பட்டினம் மாவட்டம், பரவைக்கார தெரு, எண்.6 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.G.மாரிமுத்து என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண்.4, பரவைக்கார தெரு என்ற முகவரியில் வசிக்கும் கலியபெருமாள் மகன் மு.ராஜா என்பவர் வார்டு 3, பிளாக் 14, டவுன் சர்வே எண்.1141–ல் நகராட்சி அனுமதி பெறாமல், நகராட்சி கட்டட வரைபட அனுமதி விதிமுறைகளுக்கு எதிராக, நகர் ஊர் அமைப்பு கட்டட விதிமுறைகளுக்கு எதிராக அனைத்து விதிமுறைகளையும் மீறி (Violation of Rules & Breach of Law) கட்டடம் கட்டி வருகிறார்.

கட்டட கட்டுமானப் பொருட்கள் தெரு முழுவதும் ஆக்கிரமித்து கொட்டப்பட்டுள்ளதால் பொதுமக்கள் தெருவை – சாலையை பயன்படுத்த முடியவில்லை. மேலும் ஒரு வீட்டிற்கும் மற்றொரு புதிய கட்டடத்திற்கும் விதிமுறைப்படி விடப்பட வேண்டிய இடைவெளி மற்றும் சாலைக்கும் கட்டப்படும் கட்டடத்திற்கும் இருக்க வேண்டிய போதிய இடைவெளி விடப்படவில்லை.

கட்டட கட்டுமானப் பணியின்போது பக்கத்தில் அருகருகே வசிக்கும் என்னைப்போன்ற வயதான, நோயுற்ற, பொதுமக்கள், வரம்புமீறிய கட்டட கட்டுமான பணிகளால், கட்டுமானப் பணியில் ஏற்படும் தவறுகளால், விதிமீறல்களால் மிகவும் உடல்நலம், மனநலம் பாதிக்கப்பட்டு இருக்கிறேன்.

எனவே, தயவு செய்து சட்ட விதிமுறைகளுக்கு எதிராகவும், பொதுமக்களுக்கு மன உளைச்சல், சிரமங்கள், தொல்லைகள் ஏற்படுத்தும் விதமாகவும் கட்டப்படும் சட்ட விரோத கட்டட கட்டுமானத்தை உரிய ஆய்வு செய்து உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து கட்டடத்தை சீல் வைத்து பொதுமக்களுக்கு தொல்லை, சாலை ஆக்கிரமிப்பு செய்துள்ள கட்டட உரிமையாளர் மீதும் எனது புகாரின் மீது உரிய ஆய்வு செய்யாமல், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அரசு அலுவலரின் கடமையை செய்யத் தவறிய நாகப்பட்டினம் நகராட்சி அதிகாரிகள் மீதும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 02.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளர் தனது 19.06.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"புகார் மனுவில் நகராட்சியில் கட்டட அனுமதி பெறாமல் திரு.க.ராஜா என்பவர் பரவைக்கார தெரு, நகரளவு எண்.1141-ல் உள்ள மனையில் கட்டடம் கட்டி வருகின்றார் என்று குறிப்பிட்டுள்ளது முற்றிலும் தவறான செய்தியாகும். நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கதவு எண்.14, நகரளவு எண்.1141-ல் உள்ள மனையிடத்தில் நிலையிலுள்ள கட்டடத்தை இடித்துவிட்டு புதிதாக குடியிருப்புக் கட்டடம் தரைத்தளம் 1397 சதுரடி மற்றும் முதல் தளம் 1397 சதுரடி பரப்பளவிலும் கட்டடம் கட்டுவதற்கு திரு.க.ராஜா என்பவரால் இணைய தளம் வழியாக வரைபட அனுமதி வேண்டி விண்ணப்பம் (க.வி.எண்.098/CP/22-23/0003790 ) பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது. மேற்படி கட்டட விண்ணப்பம் நகராட்சியால் பரிசீலனை செய்யப்பட்டு, கட்டட உரிமக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களின் கூடுதல் ரூ.79,600/- ரசீது எண்.098/CP/23-24/0000865 நாள் 22.04.2023-ல் இணையதளம் வழியாக நகராட்சி கணக்கில் செலுத்தப்பட்டது. கட்டட உரிமக் கட்டணங்கள் செலுத்தப்பட்ட பிறகு கட்டட வரைபட அனுமதி எண். 098/BL/2023/00064 நாள் 26.04.2023-ன்படி கட்டட உரிம ஆணை திரு.க.ராஜா த/பெ. திரு. கலியபெருமாள் உரிமையாளர் பெயரில் வழங்கப்பட்டுள்ளது. உத்தேச கட்டடம் தரைதளம் 1397 சதுரடி மற்றும் முதல் தளம் 1397 சதுரடி பரப்பளவு உடைய குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. S.R.No.098/CP/22-23/0003790, B.P.No.098/BL/2023/00064 என எண்ணிடப்பட்டுள்ளது" என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரும் 17.07.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.06.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திருமதி.G. மாரிமுத்து, 17.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"நாகப்பட்டினம், பரவைகார தெரு, எண்.6 என்ற முகவரியில் வசிக்கும் நான் கடந்த 70 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். எனது தெருவிலேயே எண் 6ல் வசிக்கும் திரு. ராஜா என்பவர் நகராட்சி அனுமதி பெறாமலும், விதிகளை மீறியும் கட்டடம் கட்டி வருகிறார். மேற்கண்ட கட்டடத்தின் கட்டுமானத்தின்போது விதிமுறைப்படி விடப்படவேண்டிய போதிய இடைவெளியின்றி கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட வரம்பு மீறி கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் Sun Shade எங்கள் வீட்டின் கூரையின் மீது வளர்த்து கட்டப்பட்டுள்ளது.

மேற்கண்ட கட்டடம் சாலையை ஆக்கிரமித்தும், அதன் மேற்புறம் எங்களது இடத்தை ஆக்கிரமித்தும் கட்டப்பட்டுள்ளதால், ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள பகுதியை அப்புறப்படுத்த ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான நாகப்பட்டினம் நகராட்சி ஆணையருக்கு பதிலாக 17.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் நாகப்பட்டினம் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள நகரளவு எண் 1141–ல் உள்ள மனையில் கட்டப்பட்டு வரும் கட்டடத்திற்கு வரைபட அனுமதி 22.4.2023 அன்று நகராட்சியால் அளிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். புகார் மனு பெறப்பட்டதைத் தொடர்ந்து மேற்கண்ட கட்டடம் ஆய்வு செய்யப்பட்டது. அக்கட்டடத்தின் மாடியில் உள்ள Sun Shade விதிகளை மீறி அதாவது மனுதாரரின் வீட்டின் எல்லையில் 3 அடி அகலத்திற்கு ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளதால், அதனை இடித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட ஆக்கிரமித்து கட்டப்பட்ட ஒரு பக்கத்தில் உள்ள கட்டடப் பகுதியை அப்புறப்படுத்தும்போது மனுதாரரின் மகள் தற்போது அதனை இடிக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அப்புறப்படுத்தும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரரின் வீட்டின் மேல் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள Sun Shade இன்னும் 15 நாட்களில் மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் பாதுகாப்புடன் அப்புறப்படுத்தப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், நாகப்பட்டினம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நாகப்பட்டினம் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

நாகப்பட்டினத்தை சார்ந்த மனுதாரர் திருமதி.G.மாரிமுத்து என்பவர் தனது 22.05.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு 3, பிளாக் 14, சர்வே எண்.1141–ல் திரு.K.ராஜா என்பவர் நகராட்சியின் அனுமதியின்றி விதிமீறி கட்டடம் கட்டி வருகிறார் எனவும் மற்றும் கட்டப்படும் கட்டடத்திற்கும், அருகிலுள்ள குடியிருப்புக்கும் போதிய இடைவெளியின்றி ஆக்கிரமித்து கட்டி வருவதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் சர்வே எண்.1141–ல் திரு.K.ராஜா என்பவருக்கு அம்மனையிடத்தில் நிலையிலுள்ள கட்டடத்தை இடித்து புதிதாக குடியிருப்புக் கட்டடமாக தரைத்தளம் 1397 சதுர அடி மற்றும் முதல் தளம் 1397 சதுர அடி பரப்பளவில் கட்டடங்கள் கட்ட நாகப்பட்டினம் உள்ளூர் திட்டக்குழுமம் மூலம் நாகப்பட்டினம் நகராட்சி திட்ட அனுமதியும் மற்றும்

நாகப்பட்டினம் நகராட்சி கட்டட அனுமதி உத்தரவும் 26.04.2023 அன்று வழங்கப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரரின் புகார், நகராட்சியில் பெறப்பட்டதும், அக்கட்டடத்தை ஆய்வு செய்து, அக்கட்டடத்தின் மாடியிலுள்ள Sun shade, விதிகளை மீறி மனுதாரரின் வீட்டின் எல்லையில் 1 அடி அகலத்திற்கு ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளதை அகற்றிட நடவடிக்கை எடுத்த சமயத்தில் மனுதாரரின் மகள் கேட்டுக் கொண்டதன் பேரில் இடிக்கும் பணியினை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாகவும் இருப்பினும், மனுதாரருக்கு எவ்வித பாதிப்புமின்றி இன்னும் 15 நாட்களில் பாதுகாப்புடன் அப்புறப்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதியளித்துள்ளதை நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குடியிருக்கும் இடமானது ஓட்டு வீடாக உள்ளதையும், வீட்டின் மேலே ஆக்கிரமிப்பு செய்து **Sun shade** கட்டப்பட்டுள்ளதையும் புகைப்படங்களின் வாயிலாக தெள்ளத் தெளிவாக அறிய முடிகிறது. எனவே, மனுதாரர் குடியிருக்கும் இடமானது ஓட்டு வீடு என்பதாலும், 83 வயதான மனுதாரர் மற்றும் குடியிருப்போரின் சுகாதார நலத்தினைக் கருத்தில் கொண்டும், மனுதாரரின் இடத்திற்கு எந்தவித சேதாரமும் இல்லாமல் மனுதாரரின் குடியிருப்புக்குள் எவ்வித கட்டடக் கழிவுகள் உட்புகா வண்ணமும், பொதுமக்களுக்கு எவ்வித இடையூறு ஏற்படாத வகையிலும் போதிய பாதுகாப்புடன் 15 நாட்களுக்குள் ஆக்கிரமிப்பை அகற்றிட உரிய நடவடிக்கை எடுத்து அதன் அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு நாகப்பட்டினம் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.G.மாரிமுத்து,
எண்.6, பரவைக்கார தெரு, நாகப்பட்டினம் மாவட்டம்.

2) ஆணையாளர், நாகப்பட்டினம் நகராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம் – 611 001.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்